தினசரி சந்தை நிலவரத்திட்டத்தின் வெற்றி கதைகள்

பெயர்: நிர்மல்

தொழில்: இடைத் தரகர்



அனுபவம்: 6 வருடம்

முகவரி: சிறுமுகை, மேட்டுப்பாளையம்

அலைபேசி: 09865497088

என் பெயர் நிர்மல். நான் இடைத்தரகராக வேலை செய்து வருகிறேன். அதாவது சிறு விவசாயிகளிடமிருந்து விவசாய பொருள்களை ஓரிடத்தில் ஒருங்கிணைந்து அந்த விளை பொருட்களை சந்தையில் விற்பனை செய்வது. விவசாயிகள் தங்கள் போக்குவரத்து செலவுகளை குறைக்க தரகர்களை நாடுகிறார்கள். நான் வியாபாரம் செய்யும் சந்தைகள் கோயமுத்தூர் எம்.ஜி.ஆர் சந்தை, மேட்டுப்பாளையம் சந்தை, அறுவடை செய்யும் சமயத்தில் நான் அனைத்து வியாபாரிகளையும் தொடர்பு கொண்டு வேண்டிய தகவல்களை பெறுவேன். அதன் பின்பு தான் எங்கு சென்றால் நல்ல லாபம் கிடைக்கும் என்பதை முடிவு செய்வேன். இந்த முறையைத்தான் கடந்த 6 வருடங்களாக பின்பற்றி வருகிறேன்.

அண்மையில் மேட்டுப்பாளையம் சந்தை ஆய்வாளர் மூலமாக உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையம் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இணைந்து செயல்படுத்தும் தமிழ்நாடு மற்றும் அதை சுற்றியுள்ள 13 சந்தைகளின் விவரங்களை தரும்

தினசரி சந்தை நிலவரத்தைப் பற்றி தெரிந்து கொண்டேன். இந்த தகவல்கள் www.indg.in/india/market-information மற்றும் www.tnau.ac.in ஆகிய இணையதளங்கள் மூலமாக கிடைக்கின்றன. இந்த இணைய தளத்தில் எல்லா நாள்களின் சந்தை விவரங்களையும் காண முடியும். இந்த இணையதளம் நிறைய உபயோகமான தகவல்களை கொண்டுள்ளது. வியாபாரியின் பெயர், முகவரி, தொலைபேசி எண் மற்றும் அவர் கையாளும் பொருள்கள் ஆகிய விவரங்கள் உள்ளது. மேலும் சந்தை விவரங்களை பெறுவதற்காக என் அலைபேசி எண்ணையும் இதில் பதிவு செய்து உள்ளேன். இப்பொழுது சரியாக 3 மணிக்கு குறுந்தகவல்கள் வந்து விடுகிறது. இந்த குறுந்தகவல்களைப் பற்றி குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். இது ஒரு பொருளுக்கு 2 சந்தைகளின் விலை நிலவரங்களை கொண்டுள்ளது. இது மிக எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும் படியாகவும் உள்ளது.

இந்த தகவல்களின் உதவியால் என்னால் எளிதாக சந்தைகளை தேர்ந்து எடுத்து காய்கனிகளை விற்பனை செய்ய முடிகிறது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், விவசாயிகளுக்கு வழங்கும் இந்த சேவையை மதிக்கிறேன். ஒரு தரகராக நான் ஒரு விஷயத்தை குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். வியாபாரிகளிடம் இருந்து தகவல்களை பெறுவது எளிதான காரியம் அல்ல. இந்த திட்டத்தில் பணிபுரியும் 13 சந்தை ஆய்வாளர்களையும் பாராட்டுகிறேன். இந்த குறுந்தகவல் சேவையை எங்கள் அனைவருக்கும் இலவசமாக அளிப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.